ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/35 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12

*2088/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கேகாலை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் சேகரிப்புத் தாங்கியையும் உட்செல்லும் பாதையையும் நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினுடாக அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, செத்தெம்பர் 07.
5/2/2/1415.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 53 D, திக்எல்லவத்த கிராம அலுவலர் பிரிவில், திக்எல்ல ஜனபதய (பெரகல) கிராமத்தில் அமைந்துள்ள திக்எல்லவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 8 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | பிரதான வீதியிலிருந்து வீடுகளுக்கு செல்வற்கான உட்செல்லும் வழி மற்றும் குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| கிழக்கு | : | குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| தெற்கு | : | குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| மேற்கு | : | குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் வீதி. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :

திரு. எம். பீ. சிரிசேன,
இல. 85, திக்எல்ல,
கேகாலை.

09-734

1A - G 28507 —18 (2018/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.